செ.வெ.எண்:62 நாள்: 28.06.2019

**அரியலூரில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் வேலைவாய்ப்பற்றோர் இளைஞர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலையில் இன்று (28.06.2019) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் தொடங்கி வைத்து, பல்வேறு தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் அரங்குகளை பார்வையிட்டார்கள்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் நடைபெறும் இத்தனியார் வேலைவாய்ப்பு முகாம் படித்த, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஒரு தன்னம்பிக்கை ஏற்படுத்தக்கூடியதாக இம்முகாம் அமைகிறது.

இம்முகாமில், 4368 பேர் கலந்துகொண்டார்கள். இதில் 1449 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இதில் மாற்றுத்திறனாளிகள் 13 நபர்கள் ஆவர். 70-க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்றனர்.

ஆண்கள், பெண்கள் இருவருக்கும் எழுதப்படிக்க தெரிந்தோர்கள் முதல் பட்டப்படிப்பு, தொழிற்படிப்பு படித்தவர்கள் வரை திறமைக்கேற்ப இங்கு பல தனியார் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு வழங்கிட வருகைப்புரிந்துள்ளனர். வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் தேடிச்சென்ற காலம் கடந்து, தற்பொழுது அவர்கள் இருக்கும் இடங்களிலேயே அவர்களது படிப்பிற்கேற்ப வேலைவாய்ப்புகளை தமிழக அரசு உருவாக்கி வருகிறது.

குறிப்பாக, வேலைவாய்ப்பற்ற பெண்கள் அனைவரும் வேலைவாய்ப்புகளை தேடி செல்வதில் அவர்களுக்கு மிக சிரமமாக இருந்தது, அதையல்லாம் சரிசெய்திடும் வகையில் அவர்கள் இருக்கும் இடங்களிலேயே அவர் அவர்களின் கல்வி திறமைகளுக்கேற்ப வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. எனவே, இம்மாதிரி வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்தி, பயன்பெறுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்.

இம்முகாமில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் **திரு.அ.எகசானலி**, முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம திரு.ந.நாகராஜ்,பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் திரு.சண்முகராஜன், திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) திருமதி.லலிதா மற்றும் அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.**